பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் ...

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5.00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 26 திங்கட்கிழமை (11-9-2000) தொ பேசி:- 3378 ஒலி: 266

★ பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள்

# முன்னாள் மேயர் செழியன் பேரின்பநாயகம், மனோகரம்பிள்ளை சுட்டுக்கொல்லப்பட்டனர்

## கல்முனை பாண்டிருப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

முன்னாள் மட்டக்களப்பு மேயரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளருமான செழியன் ஜே பேரின்பநாயகமும், அம்பாறை மாவட்ட வேட்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ்ப் பிரிவு அமைப்பாளர் எஸ். மனோகரம்பிள்ளைஆகிய இருவரும் நேற்றுக் காலை 10.40 மணியளவில், கல்முனைப் பாண்டிருப்பில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கல்முனை பாண்டிருப்பு வீதியில் உள்ள சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் எஸ். மனோகரம்பிள்ளை வீட்டில்எதிர் வரும் பொதுத் தேர்தல் தொடர் (8 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →
க. பொ. த. சாதாரணதர மாணவருக்கான விஞ்ஞான பகுதி I

## இளைஞன் காயம்

(திருமலை)

திருகோணமலைக் கடலில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதல்சம்பவத்தில்தமிழ் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ கொழும்புத்துறை - அரியாலைப் பகுதியில்

# ராணுவம்-புலிகள் உக்கிரசண்டை

# 'மிக்'ரக விமானங்கள் குண்டுமழை!

## இருதரப்பிலும் பரஸ்பரம்ஷெல் தாக்குதல்

(நமது நிருபர்)

கொழும்புத்துறை அரியாலைப் பகுதிகளிலிருந்து நாவற்குழி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல்களை மேற் கொண்டிருந்தனர்

இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சிகளுக்கு "மிக்" ரக குண்டுவீச்சு விமானங்களும் இஸ்ரேலிய தயாரிப்பான இராட்சதக் ஹெலிகளும் வான்பரப்பில் இருந்து சரமாரியான குண்டுகளை வீசித்தள்ளியும். துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்த வண்ணமும் இருந்தன.

இம்மோதல் சம்பவத்தின் போது இருதரப்பிலும் பாரியஉயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது

தேர்தலுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை நேற்று மூன்றாவது தடவையாக கொழும்புத்துறை அரியாலைப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தின (8 ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்த படையினருடன்

## அமைச்சர் சென்ற வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு! ஐவர் காயம்

(நுவரெலியா)

தொழிலமைச்சர் ஜோன் செனவிரத்ன சென்ற வாகனத்தின் மீது நுவரெலியாவில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் ஐவர் காயமடைந்துள்ளனர். இவர் (8 ஆம்பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தேர்தல் களத்தில் குதித்துள்ள வேட்பாளர்களின் விபரங்களை பாதுகாப்பு படையினர் திரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபரங்களை யாழ். நகர 512 வது கட்டளைத் தலைமையகப் படையினரும் யாழ் சிவில் நிர்வாக பிரிவைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கு நேரில் சென்று திரட்டி வருவ (8 ஆம் பக்கம் பார்க்க)

யின் போது இராணுவத்தின

(8 ஆம் பக்கம் பார்க்க)

கப்படுகிறது.

இந்த விபரங்களை யாழ்.

நேரில் சென்று திரட்டி வருவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த படையினருடன் வாகனங்கள் பலாலி விரைவு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கும் விடுதலைபபுலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இராணுவத்தினரை பஸ்வண்டிகளிலும், பிக்கப் வாகனங்களிலும், அம்புலன்ஸ் வண்டிகளிலும் பலாலி இராணுவ வைத்திய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறைச்சந்தியை படையினர் கைப்பற்றினராம்

### ஊடகத் தகவல் நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடா நாட்டில் நெடுங்குளம் முதல் கொழும்புத்துறை வரையான பிரதான வீதியை இராணுவம் கைப்பற்றியுள்ளதாக விசேட ஊடக தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கொழும்புத்துறையில்

(8 ஆம பக்கம் பார்க்க)

## கொழும்பில் புலிகள் ஊடுருவலாம் அமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு கடந்த வெள்ளிக்கிழமை முதல் அதிகரிக்கப்படுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் சிரேஷ்ட அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டமொன்றிலேயே பாதுகாப்பு பலப்படுத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிரேஷ்ட அமைச்சர்களையும் அரசியல் வாதிகளையும் கட்சித் தலைவர்களையும் கொலைசெய்யும் நோக்குடன் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்கா, அமைச்சர் பௌசி உட்பட பலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை ஐக்கியதேசியக் கட்சி மாற்றுக் குழுவினருக்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஃ!

## மூதூரில் கிளைமோர் தாக்குதல் 2படையினரும் ஆட்டோசாரதியும் பலி

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர்ப் பகுதியில் நேற்று இடம்பெற்ற புலிகளின் கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு படையினரும் ஆட்டோ சாரதியும் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9மணியளவில் மூதூர் தோப்புப் பகுதி சின்னக்கல்வான் பாலம் எனும் இடத்தில் இடம்பெற்றது.

பலியான இரண்டு படையினரும் ஆட்டோவில் ஏறி பாலத்தோப்பு முகாமுக்கு சென்ற போதே இக்கிளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 139 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான நியமனங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினமான கடந்த மாதம் 28ஆம் திகதி தொடக்கம் இன்று வரை 139 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முழுநாளும் 34 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் இதில் பொதுஜன ஐ. முன்னணிக்கு எதிராக 9 முறைப்பாடுகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக16 முறைப்பாடுகளும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை தீவிரப்படுத்துவதில் அரசியல் வாதிகள் தீவிரம்

## நீதிக்கும் சமாதானத்திற்குமான குழு தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள போரினால்பல நூற்றுக்கணக்கான உயிர்கள் இரு தரப்பிலும் பலியாகியுள்ளதுடன் அப்பாவிப் பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான பொது மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். குடா நாட்டு மக்கள் படும் துன்பத்தை பிறர் முழுமையாக உணர முடியாது. துர்அதிஷ்டவசமாக இதில் தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள் யுத்தத்தைத் தீவிரப் படுத்தவே முனைப்பாகவுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நீதி சமாதான மனித முன்னேற்றத்துக்கான ஆணைக்குழு நீதி சமாதானத்துக்கான தேசிய இயக்கம், சர்வமத காங்கிரஸ் ஆகிய நான்கு மத அமைப்புக்களினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவதும்.

தொடர்கின்ற யுத்தத்தினை அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறு விதத்தில் தீர்க்கப்பட முடியாதென்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்குத் தக்க சூழ் நிலையை ஏற்படுத்துவது இன்றைய அவசர தேவையாகும். நாடு நெருக்கடியிலிருந்து மீள தம்மாலான உதவியைச் செய்யுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்கின்றோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-77)

# இடம் பெயர்ந்த மக்கள் விரக்தியின் விளிம்பில்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் வடமராட்சி பிரதேசங்களில் தஞ்சமடைந்துள்ள அடிமட்ட குடும்பங்களைச் சார்ந்தபலர் அன்றாடம் வருமானம் எதுவுமற்ற நிலையில் தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் பலர் விரக்தி நிலையில் இருப்பதாகவும் நம்பப் படுகின்றது.

அரசாங்கத்தினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணப் பொருட்களை நம்பி தமது ஜீவனோபாயத்தை முன்னெடுத்துச் செல்வதில் பல நடைமுறைப் பிரச்சினைகள், சிக்கல்களை இத்தகையவர்கள் சந்திக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

நிவாரணத்தில் வழங்கப்படும் அரிசி, சீனி, பருப்பு மற்றும் பால்மாவை மட்டும் கொண்டு குடும்ப அங்கத்தவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது எனப் பாதிக்கப் பட்டவர்கள் தரப்பில் கூறப் பட்டு வருகின்றது.

அத்துடன் மாதத்தில் ஒரு தடவை மட்டும் வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்கள் ஒரு சில நாட்களுக்கே போதுமானதாக உள்ளது. எனவும் சம்பந்தப்பட்டோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் பொது நிறுவனங்களால் வழங்கப் படும் உதவிகள் தமது தேவையை நிறைவேற்ற போதுமானதல்ல எனவும் சம்பந்தப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-77)

# நல்லூர் பிரதேசசபையை நகர சபையாக மாற்ற முயற்சி

## தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபை விரைவில் நகர சபையாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவ ராஜன் (நிசாந்தன்) தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஈ.பி.டி.பி தலைமையகத்தில் இடம் பெற்ற 1999 ஆம் ஆண்டு 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும், 1998-ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையிலும் உயர் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த வறுமைக் கோட்டிற்குள் வாழும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசத்திற்குட்பட்ட வங்கிகள், பல்கலைக் கழகம் உட்பட பல திணைக் களங்களும் அமைந்துள்ளதுடன் அதிக வருமானம் பெறும் பகுதியாகவும் உள்ளதால் இதை நகரசபையாக மாற்ற வேண்டும்.

மேலும் 20 இலட்சம் ரூபா செலவில் வீட்டுடன் கூடிய காணி ஒன்றை பிரதேச சபையால் பெற்றுள்ளோம். இது பல்கலைக்கழக மாணவரின் விடுதியாக பயன்படுத்தப்படவுள்ளது.

98-ம் ஆண்டு நீங்கள் எமக்களித்த அதிகார மூலம் எமது செயற்பாட்டை அறிவீர்கள் எனவே எதிர்வரும் காலங்களில் எம்மை வெற்றி பெற்ற கட்சியாக பாராளுமன்றம் செல்ல உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் வாழ்த்துரை வழங்குகையில், சமூகம்படுகின்ற அவலங்களில் இருந்து சமூகத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையையே எமது கட்சி மேற்கொண்டுவருகின்றது.

இத்தகைய புலமைப்பரிசில் திட்டங்களை ஏனைய பிரதேசசபைகளும் ஒரு முன்மாதிரியாக பின்பற்றவேண்டும்.

இப்பிரதேசமாணவ மாணவியர்களுக்கு இந்த ஊக்குவிப்புக் கொடை ஒரு உந்துதலாக அமையும் எனத் தெரி

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை-மானிப்பாய்

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

எம்மால் பின்வரும் வேலைகளுக்கு பந்தி 07 இல் குறிப்பிட்டபடி பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 2000. 09. 11 - 2000. 09. 20 பிற்பகல் 3.00 மணி வரை.
02. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் திகதி :- 2000. 09. 22 முற்பகல் 10. 00 மணிவரை
03. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2000-09-22 முற்பகல் 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)
04. கேள்விகளை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு;
05. மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப்பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% செலுத்த வேண்டும்.
06. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கும் ஒரு பிரதியை அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது தலைமைச் செயலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியில் பந்தி 02 இல் குறிப்பிட்டபடி கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.
07. இலக்கம் 01 இற்கு உரிய வேலைக்கு மட்டும் இக்ராட் நிறுவனத்தில் எம் 08 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட சகல ஒப்பந்தகாரர்களும் இலக்கம் 02 தொடக்கம் 06 வரையான வேலைகளுக்கு எமது சபையின் தளபாட வேலைக்கென பதிவு செய்தவர்களும், ஏனைய வேலைகளுக்கு எமது சபையில் கட்டிட வேலைக்கென பதிவு செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்;

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப்பணம் |
|---|---|---|
| 01) மானிப்பாய் பட்டினசபை நகரமண்டபம் புனரமைப்பு | 3000.00 | 500.00 |
| 02) [illegible] | | |

## சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவை முன்னிட்டு, "உதித்தனன் உலகமுய்ய" என்னும் தலைப்பில் ஆறு. திருமுருகன் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

## எந்திரவியல் டிப்ளோமா மாணவர்க்கு

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறி முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சை சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல், வரும் புதன்கிழமை 13 ஆம் திகதி திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர் பதிவுப் புத்தகமும் அன்றைய தினமே வழங்கப்படவிருப்பதால் அனைத்து முதலாம் வருட மாணவர்களையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு சம்பந்தப் பட்ட மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (உ)

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
அருண்பாண்டி
விஜயசாந்தி நடித்த
[illegible]

| | | |
|---|---|---|
| 01) மானிப்பாய் பட்டினசபை நகரமண்டபம் புனரமைப்பு | 3000.00 | 500.00 |
| 02) பண்டத்தரிப்பு அரசடி சனசமூக நிலையதளபாடம்செய்து வழங்கல். | 500.00 | 200.00 |
| 03) மாதகல் இளைஞர் சனசமூகநிலைய முன்பள்ளி பாடசாலை தளபாடம் செய்து வழங்கல். | 500.00 | 200.00 |
| 04) சாந்தை முன்பள்ளி தளபாடம் செய்து வழங்கல். | 500.00 | 200.00 |
| 05) மானிப்பாய் பிரதேசசபை தளபாடம் செய்து வழங்கல். | 1000.00 | 200.00 |
| 06) மானிப்பாய் கிராமஉப அலுவலக தளபாடத் திருத்தம் | 500.00 | 200.00 |
| 7) மானிப்பாய் கிராமசபை அலுவலக மதில் புதிதாக அமைத்தல். | 1000.00 | 200.00 |
| 08) மானிப்பாய் கிராம உப அலுவலக கட்டிடம் திருத்தமும்தீந்தை அடித்தலும் | 1500.00 | 200.00 |
| 09) வழம் வீதியில் இருந்து ஆரம்பிக்கும் டக்சு வீதியில்(கியூப் பைப்) குழாய் வைத்து வீதி திருததம். | 1500.00 | 200.00 |
| 10) வைரவர் கோவில் தார் வீதி திருத்தம் (கலையரங்கம் வீதி) | 1500.00 | 200.00 |
| 11) குரங்கிளிப்பான் தார் வீதிபுனரமைப்பு | 1000.00 | 200.00 |
| 12) தேக்க மரத்தடி வீதி திருத்தம் | 3000.00 | 200.00 |
| 13) மேதர்ஸ் வீதி திருத்தம் | 1000.00 | 200.00 |
| 14) தலைமை அலுவலகத்தில் சேதமடைந்த கொட்டகையை கழற்றி மானிப்பாய் கிராம நூல்நிலைய துவிச்சக்கரவண்டி கொட்டகையாக மாற்றி அமைத்தல். | 500.00 | 200.00 |

செயலாளர்,
பிரான்சிஸ் விக்டர்

தலைவர்
வெலிச்சோர்அன்ரன் ஜோன்சன்
ஜே. பி.யூ.எம்

வலி. தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
2000.09.08.

(கி-781)

இப்பிரதேசமாணவ மாணவியர்களுக்கு இந்த ஊக்குவிப்புக் கொடை ஒரு உந்துதலாக அமையும் எனத் தெரிவித்தார்.

நேற்றைய நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் பிரதேச சபை தலைவர்கள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார் சுவாமிகள், பெற்றோர்கள் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க-3)

அருண்பாண்டி
விஜயசாந்தி நடித்த
கிரன் I.P.S
காட்சி நேரம்
மு. ப 10-30 (ப.நே)

சிவாஜி நடித்த
தெய்வமகன்
[காட்சி நேரம்]
பி. ப. 2.00 [ப.நே)
[இ 688]

வாழ்த்துகின்றோம்

எமது நிறுவன பயிற்சி இயக்குநராகவும் விரிவுரையாளராகவும் இதுவரை காலமும் சேவையாற்றிய

திருவாளர்
ரி. இராஜரட்ணம்
அவர்கள்

எமது நிறுவனத்தின் முதலாவது அதிகாரம் கொண்ட இயக்குநராக தெரிவுசெய்யப்பட்டதையிட்டு யாழ். உயர் தொழில் நுட்ப மாணவர் ஒன்றியமும் மாணவர்களும் தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்

யாழ். உயர் தொழில் நுட்ப
மாணவர் ஒன்றியம்

(1718)

# இந்தியா செல்லும் ஈழ அகதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

(மொறட்டுவ)

இலங்கையில் இருந்து இந்தியாவிற்குள் தஞ்சம் கோரி வரும் அகதிகள் எவரும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என இந்திய அரசு, அகதிகளுக்கான ஐ. நா உயர் ஸ்தானிகராலயத்துக்கு உறுதியளித்துள்ளது.

இந்தியக் கடல் எல்லைக்குள் வரும் அகதிகளை இந்தியக்கரைக்கு கொண்டு வந்து சேர்க்குமாறு அந்த நாட்டுக் கடற்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக யூ.என்.எச்.சி ஆரின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில்இருந்துசென்ற அகதிகள் கடலில் மூழ்கி இறந்தமை மற்றும் காணாமல் போயுள்ளமை காரணமாகவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-2)

# மாண்டவர் மீண்ட அதிசயம் யாழ். மருத்துவமனையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மாண்டுபோனதாகக் கருதப்பட்டவர், மீண்டு வந்த சந்தோசத்தைக் கொண்டாடும் வேளை மீண்டும் இறந்துபோன சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் யாழ். மருத்துவமனையில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

யாழ். நகரில் சிகிச்சையின் பொருட்டு அனுமதிக்கப்பட்டிருந்த மூதியவர் ஒருவர் இறந்துவிட்டதாக உறவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, சடலத்தைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளுடன் சவப்பெட்டி சகிதம் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு உறவினர் விரைந்தனர்.

ஆனால் அங்கு சென்று பார்த்தபோது, ஆச்சரியம் காத்திருந்தது. அவர் இறக்கவில்லை. இது கண்டு ஆச்சரியமும், மகிழ்ச்சியும் ஒரு சேரப் பெற்றவர்களாய் சவப்பெட்டியை பெற்றகடையிலேயே ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

எனினும் இச் சந்தோசம் ஓரிருதினங்களே நிலைத்தது. காரணம் அம் முதியவர் உண்மையிலேயே இறந்துவிட்டார்.

என்னசெய்வது.ஒப்படைத்த சவப்பெட்டியை திரும்பவும் அதே இடத்தில் பெற்று முதியவரின் ஈமக்கடன்களைச் செய்து உறவினர்முடித்தனர்.

(உ-12)

புலிகளின் கடித தலைப்பைப் பயன்படுத்தி

# தேர்தல் வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல் கடிதங்கள்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடிதத் தலைப்பை பயன்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்தேர்தல்வேட்பாளருக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் தபால் மூலம் நேற்று இடைக்கப் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட கடிதத் தலைப் பொன்றை பிரதி செய்து கடிதம் தட்டச்சுசெய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரான ஏ.எல் முகமது மா. ஈ. ரூக் மற்றும் சுயேட்சை வேட்பாளர் ஒருவருக்கும் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தோழர் நாகேஸ் என கையெழுத்திடப்பட்ட கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இது முஸ்லிம் பிரதேசத்தில் போட்டியிடும் வேற்று முஸ்லிம் கட்சிக்காரர்களால் இப் போலிக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப் படுகின்றது. எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

[க-108]

# கொழும்பு பத்திரிகைகளை தினசரி யாழ்.அனுப்பமுடிவு

## ஜனாதிபதி செயலகம் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் வெளியாகும் சகல பத்திரிகைகளையும் யாழ்ப்பாணத்திற்கு தினசரி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் சம்பந்தப்பட்டோருக்கு அவசரபணிப்புரை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் இது விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இராணுவ விமானங்கள் மூலம் மேற்படி பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி கட்சிப்பிரதிநிதிகளிடம் யாழ்ப்பாண பத்திரிகையாளர் இதுசம்பந்தமாக வலியுறுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

400 ரூபா சம்பள உயர்வுகோரி

# 5 இலட்சம் தோட்ட தொழிலாளர் போராட்டத்தில் குதிக்க முடிவு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு, 400 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு உடன் வழங்கப்படாவிட்டால் 5 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது.

இவ்வாறு பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த 15 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து எச்சரிக்கை விடுத்துள்ளன.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மேற்படி 15 தொழிற்சங்கங்ளின் கூட்டத்தில் முதலாளிமார் சம்மேளனம் மற்றும் ஏனைய பிரதான தொழிற் சங்கங்களால் மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் அரச வர்த்தமானி மூலம் தோட்டத் தொழிலாளர்க்கு 400 ரூபா இடைக்காலக் கொடுப்பனவுவழங்கப்படுவதாகதெரிவிக்கப்பட்ட போதிலும் இது வரை வழங்கப்படவில்லை.

வரும் 14 நாட்களுக்குள் இக்கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால், தொழிற்சங்கப் போராட்டம் நடத்தி எமது உரிமையை வென்றெடுக்கப்பாடுபடுவோம்.

எமது ஒன்றுபட்ட இவ் உரிமைப் போராட்டத்தினை இடைநிறுத்த முனைபவர்களை முறியடித்து போராட்டத்தை தொடர திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் 15 தொழிற்சங்க கூட்டமைப்பு மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது.

(உ)

# உடுவில் மத்தியமருந்தகம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யூ. என். டி. பி. நிதியுதவியுடன் உடுவிலில் அமைக்கப்பட்ட மத்திய மருத்தக புதிய கட்டடத் திறப்புவிழா இன்று காலை 10 மணியளவில் லயன் எஸ். ஜே. செல்வராஜா தலைமையில் இடம் பெறும்.

வலிதெற்கு பிரதேசசெயலர்ஆ. மகாலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

அன்றைய தினமே வைத்தியகலாநிதி என். சண்முகராசா மருத்துவ செயற்பாடுகளை ஆரம்பித்துவைப்பார்,

(உ)

# கூட்டுறவுச்சங்க லொறி ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குசொந்தமான லங்கா அசோக் லேடன்லொறி கடந்த வியாழக்கிழமை மேற்படி சங்கத்திடம் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி லொறி கடந்த மே மாதம் இராணுவ தேவைக்காக சாவகச்சேரியில்வைத்து இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்பட்டிருந்தது.

இவ் லொறியினை இராணுவத்திடமிருந்து மீளப்பெறுவதற்கு உதவிய அனைவருக்கும் மேற்படி சங்க பொது முகாமையானர் தமது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்கம் தற்பொழுது நெல்லியடியில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

(க-3)

ஆயுதப்போராட்ட

# அச்சுறுத்தலுள்ள நாடுகளுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள்

(கொழும்பு)

ஆயுதப்போராட்டங்களின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வரும் நாடுகளுக்கு பாதுகாப்பு வழங்க உலக நாடுகள் முன்வரவேண்டும்.

அண்மையில் அமெரிக்காவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரமாண்டு உச்சி மாநாட்டிற்கென இலங்கை ஜனாதிபதி சாந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அனுப்பி வைத்துள்ள விசேட கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மேற்படி கடிதத்தை உச்சிமாநாட்டில் வாசித்தார்.

எந்தவொரு நாடும், தீவிரவாதம் கொண்ட கிளர்ச்சிக் குழுக்களுக்கு பாதுகாப்போ அன்றி உதவிகளோ வழங்கக்கூடாது எனவும் அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் தரித்த குழுக்களை உலக சமாதானத்திற்கு எதிரானவர்களாக உலக நாடுகள் பிரகடனம் செய்ய வேண்டும்.

ஆயுதக் குழுக்களின் வளர்ச்சி, உலக ஜனநாயகத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

(உ)

# முருகன் புகழ் பாமாலை சந்நிதி ஆலயத்தில் வெளியீடு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வரலாற்றுப் புகழ்மிக்க தொண்டைமனாறு சந்நிதி ஆலயத் தேர்திருவிழாவன்று முருகன் புகழ் பாமாலை ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் தொடக்கவுரையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரனும், வெளியீட்டுரையை உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கமும், வாழ்த்துரையை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமியும், கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசனும் சிறப்புரையை பேரவையின் செயலாளர் எஸ். சக்திகிரீவனும் நிகழ்த்துவர்.

இப் பாடலை யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் நா.வி. நவரத்தினம் பாடியுள்ளார்.

(க-77)

இன்று முதல்

# யாழ். ஸ்ரான்லிக்கல்லூரி காலைநேர பாடசாலையாக இயங்கும்

## அதிபர் தெரிவிப்பு

யாழ். கனகரத்தினம்மத்திய (ஸ்ரான்லி கல்லூரி) மகாவித்தியாலயம் இன்று 11 ஆம் திகதி தொடக்கம் காலை நேரப்பாடசாலையாக பின் வரும் பாடசாலைகளில் இயங்கவுள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

தரம் 6 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்கள் யாழ். நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையிலும் தரம் 12, 13 வரையான வகுப்புக்கள் யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

(சு)


கல்வியிலும் தொழிற்துறையிலும்
புதுஒளி பாய்ந்திட கிராமந்தோறும்
மின்சாரம் எனும் எமது திட்டம் செயற்பட
வன்னியின் கட்டுப்பாட்டுப்பிரதேசம்
தன்னிறைவு பெற்றது போல் மின்சாரத்துறை
இங்கும் அபிவிருத்தி கண்டிட
எம்மை ஆதரித்திடுவீர்!



X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

(புளொட் + ஈரோஸ்)

# செய்தித் துளிகள்

## வவுனியாவில் மகாபொல

(வவுனியா)

இவ்வாண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம்எதிர்வரும்13ம்திகதி புதன்கிழமை வவுனியா தமிழ் மகாவித்தியாலயஐயாத்துரை மண்டபத்தில் வவுனியா அரச அதிபர் கே. கணேஸ்தலைமையில் நடைபெறவுள்ளது.

35 மாணவர்கள் இந்த புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொள்வார்கள். வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு பிரதி அமைச்சர் பி. சுமதிபால பிரதம அதிதியாக வைபவத்தில் கலந்துகொள்வார்.

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் விழாவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (வ)

## பாடசாலையில் எறிகணை மீட்பு

(வவுனியா)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மலசலகூடக் குழியிலிருந்து வெடிக்கும் நிலையில் வைக்கப்பட்டிருந்த ஐந்து எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலையில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளைஇக்குண்டுகள் காணப்பட்டதாகவும் இதனைக் குண்டு அகற்றும் பிரிவினரால் செயலிழக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## போட்டி முடிவுகள் வரவில்லை

(கல்வியங்காடு)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு யாழ். கலாஜோதி இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட சைவசமயப் போட்டி முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

அண்மையில் பரிசளிப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-54)

## பவளவிழா

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்பிரதமகுரு சி.சிவகுரு அவர்களின் சைவசமய சேவைகளைப் பாராட்டி எடுக்கப்படும் பவளவிழா வரும் வெள்ளிக்கிழமை பி. ப. 1.00 மணியளவில் மேற்படி ஆலய முன்றலில் இடம்பெறும்.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சைவசமயப் பெரியார்கள் பலரும் கலந்துகொண்டு ஆயுரை, வாழ்த்துரைகளை வழங்குவர். (உ)

## கட்டடம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக வகுப்பறைப் பற்றாக்குறை நிலவி வந்த சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு 2½ லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டை பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமான என். திரிலோகநாதனால் திறந்துவைக்கப்பட்டது.

அப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## பொலிஸ்மா அதிபர் சுகயீனம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு திடீர் சுகயீனம் அடைந்த நிலையில் கொழும்பு பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் தங்கியிருந்த வைத்தியசாலை பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் அவரை இரண்டு வாரங்கள் ஓய்வெடுக்குமாறும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். (வ)

## பேராசிரியர் இந்தோனேசியா பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் மேற்படிப்புகள் பீடாதிபதி அ.சண்முகதாஸ் இன்று இந்தோனேசியா பயணமாகிறார்.

பாலித்தீவில் உதயண பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 2-வது உலக மாநாட்டில் இராமாயணம், மகாபாரதம் தொடர்பான ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கும் பொருட்டே இவர் இந்தோனேசியா பயணமாக உள்ளார்.

இம் மாநாடு இம்மாதம் 13 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடையில் இடம் பெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## செஞ்சிலுவை வேண்டுகோள்

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறுஅறிவிக்கப்பட்டுள்ளது.

செல்லையா ரட்ணம், ஆஸ்பத்திரிவீதி, மட்டுவில் வடக்கு சாவகச்சேரி.

பொன்னம்பலம் நவரத்தினம், கச்சாய் வீதி சாவகச்சேரி.

பெண்ணையா நாகம்மா, புலோப்பளை கிழக்கு பளை (சு)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெற உள்ளது.

பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் இடம்பெறும். மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன், பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக எஸ். கணேசமூர்த்தியும் கலந்து கொள்வார். (க)

---

கடந்த மாதம் 31 ஆம் திகதி 02.09 2000 ஆம் திகதிகளில் 'வலம்புரி'யில் வெளியான விஞ்ஞானம் பகுதி 1க்கான விடைகள்

31ஆம் திகதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 3 | 3) | 4 |
| 4] | 1 | 5] | 1 | 6] | 3 |
| 7] | 1 | 8] | 1 | 9) | 2 |
| 10] | 2 | 11] | 3 | 12] | 1 |
| 13] | 2 | 14] | 2 | 15] | 1 |
| 16] | 3 | 17] | 1 | 18] | 3 |
| 19) | 4 | 20] | 4 | | |

02 ஆம் திகதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 4 | 3) | 1 |
| 4) | 1 | 5) | 2 | 6) | 2 |
| 7) | 4 | 8) | 1 | 9) | 2 |
| 10] | 4 | 11) | 2 | 12] | 3 |
| 13) | 4 | 14) | 4 | 15) | 1 |
| 16) | 3 | 17] | 2 | 18] | 1 |
| 19) | 4 | 20) | 1 | | |

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## விஞ்ஞானம்

### மாதிரி வினாத்தாள் - 4 பகுதி - I

[நேற்றைய தொடர்ச்சி] ஆக்கம்: மேஜா மஞ்சலிங்கம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

21-40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

21) பின்வருவனவற்றுள் எதற்கு குறைந்த எரிபற்றுநிலைஉண்டு?
(1) மண்ணெண்ணெய் (2) தேங்காய்எண்ணெய்
(3) பெற்றோல் (4) பரவின்மெழுகு

22) தாவரங்களின் இலைகளில் ஒளித்தொகுப்பின்போது உண்டாக்கப்படும் குளுக்கோசை தாவரத்தின் வேர்களின்வரைக்கும் கொண்டுசெல்லும் இழையம் பின்வருவனவற்றில் யாது?
(1) காழ் (2) மாறிழையம் (3) உரியம் (4) மையவிழையம்

23) செம்பு, ஈயம், நீர், மெதனோல் சேர்மதுசாரம்ஆகியவற்றிலே கூடிய தன்வெப்பக் கொள்ளவுஉடையபொருள்?
(1) செம்பு (2) ஈயம் (3) நீர் (4) மெதனோல் சேர்மதுசாரம்

24) தற்கால ஆவர்த்தன அட்டவணையை உருவாக்குவதற்கு அடிப்படையாய் அமைந்த இயல்பு மூலகங்களின் அணுக்களின்,
(1) திணிவுஎண் (2) அணுஆரை
(3) அணுக்கனவளவு (4) இலத்திரன் நிலையமைப்பு

25) முள்ளந்தண்டு விலங்குகளை மீன்கள் உபயவாழிகள் நகருயிர்கள், பறவைகள் முலையூட்டிகள் எனப் பாகுபடுத்தும்போது பறவைகளையும் முலையூட்டிகளையும் மற்றைய விலங்குவகைகளிலிருந்து வேறுபடுத்திக்காட்டும் பொதுஇயல்பு.
(1) மயிர்இருத்தல் (2) குஞ்சுபொரித்தல்/குட்டிஈனுதல்
(3) அனைத்துமுண்ணிகளாகஇருத்தல் (4) இளஞ்சூட்டுக் குருதிநிலைஇருத்தல்

26) ஒருமூல் மக்னீசியம் (Mg=24) நீர்மய வெள்ளிநைத்திரேற்றுக்கரைசல் மிகையளவுடன் சேர்க்கப்பட்டால் கிடைக்கக்கூடிய வெள்ளியின்திணிவு எவ்வளவாக இருக்கக்கூடும்?
(1) 9 கிராம் (2) 55 கிராம் (3) 110 கிராம் (4) 220 கிராம்

27) 'சூழ்வித்தினால்' ஆற்றப்படும் மிகமுக்கியமானதொழில்:
(1) முளையத்துக்குப் பாதுகாப்புவழங்குதலாகும்
(2)முளையத்தைச்சூழ்ந்து காணப்படலாகும்
(3) முளையத்திற்கும் தாய்க்கும்இடையே பதார்த்தப்பரிமாற்றத்தை நடத்துதலாகும்
(4) முளையத்தினதும் தாயினதும் குருதியை கலத்தல்ஆகும்.

28) 25 சதமமீற்றர் நீளம், 10சதமமீற்றர் அகலம், 5 சதமமீற்றர் உயரமான சீரான செங்கல்ஒன்று அதன்பாரிய முகப்புக்களுள்ஒன்று மேசையுடன் தொடுகையுற்றவாறு மேசையின்மீது சமநிலையில்உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அதன்நிறையினால் மேசையின்மீது பிரயோகிக்கப்படும் அமுக்கம் $0.1N/Cm^2$ ஆகும்
(1) $0.02\,N/CM^2$ (2) $0.5N/CM^2$
(3) $25N/CM^2$ (4) $0.2N/CM^2$

29) நீரால் முற்றாகநிரப்பி நீர்த்தொட்டியொன்றினுள் தலைகீழாக கவிழ்த்து 500 Ml அளவுச்சாடிஒன்று வைக்கப்பட்டுள்ளது. பின்னர் ஒரு இரப்பர்குழாயின் ஊடாக வாயினால் ஊதிக்குமிழிக்கச்செய்து அளவுச்சாடியினுள் நீர்மட்டம் சரியாக $100CM^3$ அடையாளம்வரை குறைக்கப்படும்போது அளவுச்சாடியினுள்புகும் வளிக்கனவளவு யாது? (சூழல்வெப்பநிலையிலும் 1 வளிமண்டலஅமுக்கத்திலும்).
(1) சரியாக $100\ CM^3$ ஆகும் (2) $100CM^3$ ஐவிடக் கூடுதலானதாகும்
(3) $100\ CM^3$ விடக்குறைவானதாகும்
(4) முடிவுபெறப்பட வழங்கப்பட்ட தரவுகள் போதுமானதல்ல;

30) ஓர் ஆடியின் முன்னே ஒரு பொருள் வைக்கப்பட்டபோது 0.6 பெரிதாக்கத்தைக் கொண்ட நிமிர்ந்த மாய விம்பமொன்று ஆடியின் பின்புறத்தே தோன்றியது. இத்தரவுகளை மாத்திரம் கவனத்திற் கொண்டு அவ்வாடியின் தன்மை தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய முடிவு யாது?
(1) அது ஒரு தளவாடி ஆகும் (2) அது ஒரு குவிவு ஆடி ஆகும்
(3) அது ஒரு குழிவு ஆடி ஆகும்
(4) அது குவிவு ஆடியாகவோ அல்லது குழிவு ஆடியாகவோ இருக்கலாம்

31) பின்வரும் எப்பொருளின் நீர்க்கரைசல் சோடியம் சல்பேற்று நீர்க்கரைசலுடன் சேர்ந்து ஒரு வீழ்படிவைத் தோற்றுவிக்கும்?
(1) செப்பு சல்பேற்று (2) பொட்டாசியம் காபனேற்று
(3) மக்னீசியம் குளோரைட்டு (4) பேரியம் குளோரைட்டு

32) கிளமிடமோனசு எனும் தாவரம் இருண்ட இடங்களிலிருந்து விலகி ஒளியுள்ள இடங்களை நோக்கி அசைந்து செல்வதுண்டு இந்த அசைவு
(1) இரசனை அசைவு (2) முன்னிலை அசைவு
(3) திருப்ப அசைவு (4) வீக்க அசைவு

33) பின்வருவனவற்றுள் நீரில்கரையக் கூடிய சேர்வைகள் எவை?
அ) சோடியம் காபனேற்று ஆ) வெள்ளி குளோரைட்டு
இ) பொற்றாசியம் நைத்திரேற்று ஈ) பேரியம் சல்பேற்று
(1) அ வும் ஆ வும் (2) அ வும் இ வும் (3) ஆ வும் இ வும்(4) ஆ வும் ஈ வும்

34) உணவுப் பாதையுடன் தொடர்பான மிகப்பெரிய சுரப்பி பின்வருவனவற்றுள் எது?
(1) சதையம் (2) பித்தப்பை (3) ஈரல் (4) உமிழ்நீர் சுரப்பி

35) ரேடியோ ஊடுகடத்தற் செயன்முறையின் சரியான படிமுறை ஒழுங்கைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
(1) இசைவாக்கும் சுற்று→ரேடியோ மீடிறன் அலை விரியலாக்கி→மட்டிசையழிப்பான்→கேள்மீடிறன் அலைவிரியலாக்கி→ஒலிபெருக்கி
(2) இசைவாக்குஞ் சுற்று→கேள் மீடிறன் அலை விரியலாக்கி→மட்டிசையழிப்பான்→ரேடியோ மீடிறன் அலைவிரியலாக்கி→இசைவாக்குஞ் சுற்று→ஒலிபெருக்கி
(3) கேள்மீடிறன் அலைவிரியலாக்கி→மட்டிசையழிப்பான→ரேடியோ மீடிறன் அலை விரிபலாக்கி→இசை வாக்குஞ் சுற்று→ஒலிபெருக்கி
(4) ரேடியோ மீடிறன் அலை விரியலாக்கி→கேள்மீடிறன் அலை விரியலாக்கி→மட்டிசையழிப்பான்→இசைவாக்குஞ் சுற்று→ஒலிபெருக்கி

36) அரும் பொட்டுதலின்போது ஒட்டுக்கட்டையின் பட்டையை வெட்டி ஒட்டு முளையை உட்புகுத்தும் போது ஒன்றாக இணைவன அவ்விருதாவரங்களினதும்;
(1) உரிய இழையங்களாகும் (2) காழ் இழையங்களாகும்
(3) மாறிழையங்களாகும் (4) தக்கை இழையங்களாகும்

37) ஒரு கரைசலில் $Cl^-$ அயன் அடங்கியுள்ளனவா என சோதிப்பதற்காக பயன்படுத்தக் கூடிய சேர்வை எது?
(1) சோடியமிரு காபனேற்று (2) பேரியம் குளோரைட்டு
(3) செப்புசல்பேற்று (4) ஈயநைத்திரேற்று

38) பின்வரும் தாக்கங்களில் எதன்போது அதியுயர் வீதத்தில் ஐதரசன் வாயுவிடுவிக்கப்படுகிறது?
(1) 2M Hcl இன் 20ml உம் நாகத்துண்டுகளின் 2g உம்
(2) 2M Hcl இன் 20ml உம் நாகத்தூளின் 2g உம்
(3) 1 m Hcl இன் 20ml உம் நாகத்துண்டுகளின் 2g உம்
(4) 1 m Hcl இன் 20ml உம் நாகத்தூளின் 2g உம்

39) கீழ்வருவனவற்றில் ஒலி உண்டாகும் பொழுது எதில் பொருளின் அதிர்வைக்காண முடியாது?
(1) மேளத்தைத் தடியால் அடிக்கும் பொழுது
(2) இழுத்துக்கட்டிய கம்பியை தட்டிவிட
(3) சிறிய குப்பியை வாயில் வைத்து ஊத
(4) மேசையில் செருகிய பிளேட் துண்டை தட்ட

40) கூர்ப்புக்கொள்கையின் தந்தை என அழைக்கப்படும் விஞ்ஞானி யார்?
(1) மெண்டல் (2) லீனியஸ் (3) நியூற்றன் (4) டாவின்

### இன்று ஒரு தகவல்

## வாழ்வின் சாத்வீகத்திற்கு வழிகாட்டி சத்தியமே

சத்தியவிரதன் என்ற பெயர் கொண்ட ஓர் அரசன் உண்மையைத் தனது வாழ்க்கையின் ஆதார சக்தியாக வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். அவனுடைய ஒவ்வொரு செயலிலும் உண்மையை அடிப்படையாகக் கொண்ட முடிவுகளே தெரிந்தன. அதனால் அவனுக்குப் புகழ் உண்டாயிற்று. அவனுடைய நாட்டில் செல்வம் பெருகிற்று. குடிமக்கள் வசதியுடன் சௌக்கியமாக வாழ்ந்தார்கள்.

ஆண்டவன் அவனைச் சோதிக்க நினைத்தார். நல்லவர்கள் எல்லோருக்குமே சோதனைகள் வரும். அந்தச் சோதனைகள் அவர்களை மேலும் நல்லவர்களாக்கும். அதனால் நல்லவர்கள் சோதனைகளையும் மனம் தளராது பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு நாள் பிரம்ம முகூர்த்தத்தில் - பொழுது புலராத விடியற்காலை நிலையில் சத்யவிரதன் தனது கோட்டையின் சிம்மவாயில் வழியாக, கடலில் நீராடி விட்டு வரப்புறப்பட்டான். அன்று ஒருபுண்ணிய தினமாக இருந்தபடியால் நடந்தே போய் விட்டு திரும்பிப் பூஜையில் ஈடுபட வேண்டும் என்று தீர்மானித்து வாயிலை வந்தடைந்தான். அங்கே அழகான ஓர் இளம்பெண் காத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தலையைச் சுற்றி ஒளிக்கற்றை சூழ்ந்திருந்தது. அவள் முகத்தில் அசாதாரணமான ஒளி வீசிற்று. அவள் தனது அழகான முகத்தை நிமிர்த்தி அரசனிடம் ''அரசே! வேண்டுகோள் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அளிப்பீர்களாக?'' என்று கேட்டாள் ''எது வேண்டுமானாலும் கேள்! உடனே தருவேன்'' என்று மிகவும் தாராள மனத்துடன் பதில் சொன்னான் சத்தியவிரதன். ''நான்தான் செல்வத்திற்கு அதிபதியான தேவதை. வெகு காலமாக நான் இங்கேயே இருந்து விட்டேன். கொஞ்சக் காலம் விலகிப் போய் இருக்க விரும்புகிறேன் நீ அனுமதி தர வேண்டும்.'' என்றாள் அவள். சத்தியவிரதன் பணிவுடன் தலை வணங்கி ''தாயே! அது உன் விருப்பமானால் நான் தடுக்கமாட்டேன்!'' என்று சொல்லி போக அனுமதித்துவிட்டான்.

மீண்டும் அவன் புறப்படுமுன், அந்த வாயிலில் ஒரு கம்பீரமான ஆண் உருவம் வந்து நின்றது. அதன் முகத்திலும் உடலிலும் அபூர்வமான சாந்தி மின்னிற்று. மன்னனைக் கண்டதும் கைகளைக் குவித்து ''அரசே! நான்தான் ஈகைக்கு உரிய தெய்வம். செல்வம் இருந்தால் தான் ஈகையும் சாத்தியம். தாங்கள் செல்வத்தைப் போக அனுமதித்து விட்டீர்கள். இனி நான் இருந்து பயனில்லை. என்னையும் போக விடுங்கள்'' என்றது அந்த உருவம். சத்யவிரதன் விலகி வழிவிட்டான். மறுபடி அவன் இளம்புமுன் ஓர் அழகிய நங்கை, பல்வேறு ஆபரணங்களையும் அணிந்து விலையுயர்ந்த உடை உடுத்தி அங்கே வந்து நின்றாள். சத்தியவிரதன் அவளைப் பார்த்து ''நீ யாரம்மா? நீயும் போகவிரும்புகிறாயா?'' என்று கேட்டான். ''ஆம் அரசே; நான் தான் சௌபாக்கியம் நன்றாக வாழ நான் எல்லா வசதிகளையும் கொடுப்பேன். செல்வம் இருந்தால்தான் அவற்றைப் பெற முடியும். இல்லாதவர்கள் கேட்டுப்பெற ஈகை வழிசெய்யும். இரண்டுமே இல்லாத நிலையில் நான் இருந்து என்ன பிரயோசனம்? அதனால் என்னையும் போக அனுமதியுங்கள்!'' என்றாள அந்த அழகிய நங்கை. ''அம்மணி! அதுவே உன் விருப்பமானால் நான் தடுக்க மாட்டேன். தாராளமாகப் போய் வரலாம்'' என்று அனுப்பி வைத்து விட்டான் சத்தியவிரதன.

அரசன் மீண்டும் புறப்படக் கிளம்பினான். அப்போது யாரோ அவனைக்கூப்பிடுவது புரிந்தது. நின்று திரும்பிப்பார்த்தான். பார்க்க அமைதியான தோற்றமும், ஒளிவீசும் பார்வையும் அனுபவத்தால் மெருகேறியுமநின்ற அவரைப்பார்த்து'' தாங்கள் யாரோ? தங்களுக்கு என்னவேண்டும்?'' என்று கேட்டான் சத்தியவிரதன்: ''என்னைத்தெரியவில்லையா அப்பா உனக்கு? நான் எப்போதும் உன்னுடன் இருப்பவனாயிற்றே? நான்தான் சத்தியதேவதை உன்னுடன் இதுவரைஇருந்த மூவருக்கும் போக அனுமதி அளித்துவிட்டாய். எனக்கும் போகவிடை கொடுப்பாயா?' என்றுகேட்டார் அவர்.

சத்தியவிரதன் அவருடைய காலில்விழுந்தான். சுவாமி யார் வேண்டுமானாலும் என்னை விட்டுப்போகலாம்; தாங்கள் போகவேகூடாது. சத்தியம் என்னிடமிருந்து பிரிந்துபோய்விட்டால் அப்புறம் நான் உயிர்வாழமாட்டேன். செல்வம்போனால் சம்பாதித்துக் கொள்ளலாம் செல்வம் இல்லாவிட்டாலும் உடல்உழைப்பால் நன்கொடை கொடுக்கலாம். வசதிகள் இல்லாவிட்டாலும் மக்கள் தார்மீகவாழ்க்கை நடத்தினால் மனநிறைவோடு இருப்பார்கள் ஆனால் வாக்கிலும் சொல்லிலும் சத்யம்போய் விட்டால் அப்புறம் வாழ்ந்து பயனில்லை! ஆகையால் தாங்கள்மட்டும் என்னை விட்டுபோகவே கூடாது!' என்று கேட்டுக்கொண்டான்.

சத்ய தேவதையும்ஒப்புக் கொண்டு அவனுடனேயே இருந்துவிட்டது. மனநிம்மதியுடன் அரசன் கடலில் நீராடி விட்டுத்திரும்பினான். அரண்மனைவாயிலில் அவனை வரவேற்கசெல்வம், ஈகை, வசதி, மூன்றுமே காத்துநின்றன. அரசே! சத்தியம் உள்ள இடத்தில் நாங்கள் எப்படியும்வந்து விடுவோம். உன்னைசோதிக்கவே கடவுள் எங்களை இப்படி அனுப்பிவைத்தார். நீ நலமுடன் நீண்டநாள் வாழ்வாய்! நாங்கள் உன்னோடு எப்போதும் இருப்போம்!' என்று அவைகூறின. மன்னன் பணிவுடன் தலைவணங்கி அவர்களை ஏற்றுக்கொண்டான்.

வாழ்க்கையை ஒரு சத்திய சோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம், வாக்கு, செயல், மூன்றிலும் அதைக் கடைப்பிடியுங்கள். சாந்தியும், சௌபாக்கியமும் தானே உங்களை வந்தடையும்.

புனிதம்அருளும்
புட்டபர்த்தி

---

யுத்த அனர்த்தத்தால்

## தென்மராட்சியில் 94 கூட்டுறவு ஊழியர் வேலையிழப்பு

(தென்மராட்சி)

யுத்த அனர்த்தங்கள் காரணமாக பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி பிரதேசங்களில் இயங்கிய நான்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் நீண்டகாலமாக நிரந்தர சேவையில் இருந்த 94 கூட்டுறவு ஊழியர்கள் தற்காலிகமாக சேவையில் இருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து 34 கூட்டுறவு ஊழியர்களும், கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து 25 பேரும், பளை பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து 10 பேரும், தென்மராட்சி கொத்தணியில் இருந்து 25 பேருமாக மொத்தம் 94 கூட்டுறவு ஊழியர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

அதேவேளை, குறித்த கூட்டுறவுச் சங்கங்களின் யுத்த அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாலும், நாளாந்தபணவரவும் தடைப்பட்ட நிலையில் இருப்பதாலும், இத்தகைய ஊழியர்களுக்குத் தொடர்ந்தும் மாதாந்தச் சம்பளங்களை வழங்குவதில் சங்கங்களின் நிர்வாகங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாலேயே இக்கூட்டுறவு ஊழியர்களை, தற்காலிகமாக சேவையில் இருந்து விலக்கிவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க சேவையில் இருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ள கூட்டுறவு ஊழியர்கள் தாம்விரும்பும் சுயதொழில் முயற்சியில் ஈடுபட ஏதுவாக சாவகச்சேரி சங்கம் ஒவ்வொரு ஊழியருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவும், கொடிகாமம் சங்கம் தலா 5 ஆயிரம் ரூபாவும், தென்மராட்சி கொத்தணி தலா 8 ஆயிரம் ரூபாவும் பளை சங்கம் தலா 5 ஆயிரம் ரூபாவும் வழங்கவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் சேவையில் இருந்து தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ள 94 கூட்டுறவு ஊழியர்களுக்குமான ஊழியர் சேமலாபநிதிக் கொடுப்பனவை மத்தியவங்கிக்கு அனுப்புவதைத் தற்காலிகமாக சங்கங்கள் இடைநிறுத்தியுள்ளன எனவும் அறியப்படுகின்றது. (க-77)

## வலிகாமம் கல்வி வலயத்தில் மேலும் 8 பேருக்கு ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மொழி மூல அரசாங்கப்பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையின் கீழ் வலிகாமம் கல்வி வலயத்தில் கீழ்வரும் 8 பேர் மேற்படி நியமனத்திற்கு தகுதியானவர்களெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிலானி பாலசிங்கம் பினாக் வீதி, சங்கானை. சாந்தினி வாமதேவன் பண்ணாகம் சுழிபுரம், நிரோஜினி ஸ்ரீகாந்தன் வட்டு வடக்கு. சித்தன் கேணி, தர்மினி இராஜரட்ணம் ஆஸ்பத்திரி வீதி சங்கானை, விஜயகௌரி சிவப்பிரகாசம் பனிப்புலம் பண்டத்தரிப்பு, தவமலர் பொன்னுத்துரை நூலக வீதி. அராலி தெற்கு வட்டுக்கோட்டை, அபிராமி சிவஞானசுந்தரம் பொன்னாலை மேற்கு சுழிபுரம், செந்தில்வேல் இரத்தினேஸ்வரி செட்டியகுறிச்சி பண்டத்தரிப்பு.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார். (உ)

## பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரை ஆரம்பிப்பதில் சிக்கல்

[யாழ்ப்பாணம்]

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரைகள் ஆரம்பிப்பதில் பெரும் சிக்கல் நிலை எழுந்துள்ளதாக கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2000-2001ம் கல்வி ஆண்டிற்குள் மேலும் புதிய மாணவர்களை சேர்த்துக் கொண்டதாலேயே மேற்படி இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க-42]

## இலவச பாடநூல் சகலருக்கும் கிடைக்க வேண்டும்

### ஜனாதிபதி செயலகம் உத்தரவு

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் இலவச பாடநூல்கள் சகலமாணவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வழிவகைள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஜனாதிபதிசெயலகம் மேற்கண்டவாறு சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மேற் கொண்ட முயற்சியை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா. மேற்படி கட்சிப்பீடம் தெரிவித்துள்ளது. [க]

## மிதிவெடியில் சிக்கிய நபர் வலது காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியில் சிக்கிய நபர் ஒருவர் தனது வலது காலை இழந்த சம்பவம் புத்தூர் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.

புத்தூர் கிழக்கில் சிவில் நிர்வாக காரியாலயத்திற்கு முன்பாக விறகு பொறுக்க சென்ற போதே இவ் அனர்த்தம் இடம் பெற்றது.

வேலன் நடராஜா [(வயது 50) என்பவரே தனது வலது காலை இழந்தவராவர். (க-12-105)


## சுயேச்சைக்குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

துன்பச் சுமைகள் பறந்தோட
சொந்த மண்ணில் சுகமாய் வாழ
உறவுகள் எல்லாம் ஒன்றுசேர
அளித்திடுவீர் உங்கள் வாக்கை
தொலைபேசி சின்னத்திற்கே!

[1714]

## அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்திய பிரதமரின் விஜயம்

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் வாஜ்பாய் மேற்கொண்டுள்ள 13 நாள் அமெரிக்கச் சுற்றுப்பயணம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆறுஆண்டுகளின் பின்னர் இந்தியப்பிரதமர் ஒருவர் அமெரிக்காவிற்குச் செல்வது இதுவே முதல் தடவையாகும்.

இம்மாதம் 14 ஆம் திகதி அமெரிக்க கலப்பு நாடாளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றும் பிரதமர் 15ஆம் திகதி அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனை சந்தித்துக் கலந்துரையாடுவார்.

இக்கலந்துரையாடலின் போது இருதரப்புபொருளாதார உறவுகள், தகவல் தொழில்நுட்பம், மின்துறை கட்டமைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி பேச்சு நடத்தப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரை கௌரவிக்கும் முகமாக 17ஆம் திகதி அதிபர் பில்கிளிங்டன் விருந்துபசாரம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளார். (த)

## இந்திய தீவிரவாதிகள் ஊடுருவல் எதிர்த்துப் போராட பூட்டானியர் தயார்

(புதுடில்லி)

பூட்டானுக்குள் ஊடுருவியுள்ள இந்தியத் தீவிரவாதிகளை எதிர்த்துப்போராட, இரண்டாயிரம் பூட்டானியருக்கு இந்தியா ஆயுதமும், பயிற்சியும் வழங்கிவருவதாக இந்திய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கிழக்குமாநிலமான அஸாமில் பிரிவினை கோரிபோராடிவரும், உல்பா மற்றும் சில தீவிரவாதக் குழுக்கள் பூட்டானுக்குள் ஊடுருவி முகாம் அமைத்து பயிற்சிபெற்று வருகின்றனர்.

இவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கவும் எதிர்த்துப் போராடவும் பூட்டானியப் படையினருக்குவலுப்போதாமல் உள்ளது.

இதன் காரணமாகவே அவர்களுக்கு உதவியளித்து, நம்நாட்டுத் தீவிரவாதக் குழுக்களை அழித்தொழிக்கப் போவதாக இந்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (உ)

ஐக்கிய நாடுகள் சபையில்

## தாய்வானுக்கு அங்கத்துவம் வழங்க சீனாவும் நட்பு நாடுகளும் மறுப்பு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையில் தாய்வானுக்கு அங்கத்துவம் வழங்குவதான தீர்மானம் சீனாவினதும் அதன் ஆதரவு நாடுகளினதும்தலையீட்டால் தடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகரில் அண்மையில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகளுக்கான புத்தாயிரமாண்டு மாநாட்டில் இது தொடர்பான விவாதத்திற்கு 19 நாடுகள் ஆதரவு தெரிவித்தும், 48 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துப் பேசியதை அடுத்து பொதுச் சபை தாய்வான் தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

கடந்த8வருடகாலமாகவே ஐக்கியநாடுகள் அவையில் அங்கம் வகிப்பது தொடர்பாக தாய்வான் கோரி வருகின்ற போதிலும் சீனாவினதும் அதன் ஆதரவு நாடுகளினதும் தலையீட்டால் அம்முயற்சி கைகூடாது இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஆந்திர பிரதேசத்தின் அசைக்கமுடியாத அசாத்திய பத்திரிகையாளர் ராமோஜிராவ்

(புதுடில்லி)

பத்திரிகையாளரான ராமோஜிராவ் பல்வேறுதுறைகளில் சாதனை படைத்து வருவதாக ஆந்திரப் பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹைதராபாத்தில் ஈநாடு தெலுங்குப் பத்திரிகை, நியூ ரைபஸ் ஆங்கிலப்பத்திரிகை என்பவற்றின் ஆசிரியராகவும் ஈநாடு தொலைக்காட்சி நிறுவனத்தின் சொந்தக்காரராகவும் இவர் இருக்கிறார்.

அது மட்டுமா ஹைதராபாத்திலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்தில் ராமோஜி பிலிம்சிட்டி அமைத்திருக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள ஹொலிவூட்டினை மிஞ்சியிருக்கும் இந்தத் திரைப்பட நகரத்தில் ஒரே நேரத்தில் 14 படங்களின் படப்பிடிப்புகளையும் நடத்த முடியும்.

ஆந்திர மாநிலத்தில் ஹைதராபாத்தில் அனந்தபூர் கிராமத்தில் 500 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது இந்த திரைப் படநகரம்.

இங்கு 5நட்சத்திர ஹோட்டல்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

எல்லா மதவழிபாட்டு ஸ்தலங்களையும் தனித்தனியே கொண்டுள்ள இந்த நகரத்தில் 15 இடங்களில் மொழி மாற்று அறைகளும்நீதிமன்று, சிறைச்சாலை இரண்டுரெயில் நிலையங்கள், விமான நிலையம், வைத்தியசாலை போன்றவை அமைக்கபட்டுள்ளன.

பூந்தோட்டங்களும் நீர் நிலைகளும் அமைந்துள்ளன ஒரு பத்திரிகையாளரான ராமோஜிராவ் ஆந்திரப் பிரதேசத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையாளராகினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

சீனாவில்

# வெடிபொருள் ஏற்றிவந்த வாகனம் விபத்துக்குள்ளானதில் 60 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவில், வெடிப் பொருள் ஏற்றிய வாகனம் விபத்துக்குள்ளானதில் 60 பேர் கொல்லப்பட்டனர் 300 இற்கும் மேற்பட்டோர் பாடுகாயமடைந்தனர்.

சீனத்தலைநகர் பீக்கிங் நகரப் பகுதியில் வெடிப் பொருட்களை ஏற்றிவந்த வாகனம் ஒன்றுடன் எதிரே வந்த இன்னோரு வாகனம் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

மரணமடைந்தவர்களில் ஒருசிலர் தவிர ஏனையோர் அந்நேரம் அப்பாதையூடாக பிரயாணம் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தில் வீதியூடான போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதத்திற் குள்ளாகியுள்ளன.

விபத்துக்கான காரணம் பற்றி ஆராய்ந்து வரும் புலனாய்வுத் துறையினர், தீவிரவாதிகளின் திட்டமிட்ட சதியாக இருக்கலாம் எனும் சந்தேகத்தையும் எழுப்பியுள்ளனர். (உ)

உலக தரிசனம்

உலக தரிசன அறிவுப் போட்டி - இல: 02

முழுப் பெயர் :-.................................................

முகவரி :-.................................................

.................................................

பிறந்த திகதி :-.................................................

போட்டியாளர் கையொப்பம்.................................................

பெற்ற புள்ளிகள்

## 6 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் நிலக்கண்ணியால் பாதிப்பு

### சர்வதேச இயக்கம் தகவல்

(லண்டன்)

நிலக்கண்ணிவெடிகளால் இதுவரை 6 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருப்பதாக நிலக்கண்ணிவெடியை தடைசெய்வதற்கான சர்வதேச இயக்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் நிலக்கண்ணிவெடியை தடைசெய்யும் வகையிலான முயற்சிகளையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டதன் பேரில் நிலக்கண்ணி பாவனை முற்றுப்பெறும் நிலையை அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண்ணிவெடியினை உலகத்தில் உள்ள 30 கிளர்ச்சிக்குழுக்கள் பயன்படுத்தி வருவதாகவும் இலங்கை, பர்மா, நேபாளம் ஆப்கானிஸ்தான், செனகல், அங்கோலா, உகண்டா, சோமாலியா, கொலம்பியா ஆகிய நாடுகளில் இவைபயன்படுத்தப்படுவதாகவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம் மறைந்த வேல்ஸ் இளவரசி டயானா கண்ணிவெடி விழிப்புணர்வு நடவடிக்கையில் பெரும் பங்காற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## துப்பாக்கி விற்பனை

(லண்டன்)

அவுஸ்திரேலியா மற்றும் ஆசிய நாட்டைச் சேர்ந்த குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்கள், பப்புவாநியூகினியில் துப்பாக்கிகளை விற்று அதன் பெறுமதிக்கு போதைப் பொருள் கொள்வனவு செய்வதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

துப்பாக்கிஒன்றை 5 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்துவிட்டு, அப்பெறுமதிக்கு போதைப்பொருள் வாங்கிச் செல்வதாகவும், ஆயிரம் துப்பாக்கிகள் இதுவரை இவ்வாறு விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது. (உ)

தண்ணீர் பவுஸர் மோதிய

## கிளிநொச்சி வாசியின் மரணத்தில் சந்தேகம்

### மனைவி முறையீடு

(வவுனியா)

தண்ணீர் பவுஸர் மோதியதில், வவுனியாவில் மரணமான கிளிநொச்சி வாசியினுடைய மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளது.

விபத்து காரணமாக நிகழ்ந்தமேற்படி இறப்பினை, இயற்கை மரணம் என மரணச் சான்றிதழ் வழங்கியிருப்பதே இச் சந்தேகத்திற்கு காரணமாகும்.

இதனையடுத்து மரணமான கிளிநொச்சி வாசியான பெரியசாமியின் மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழு, வவுனியா அரசாங்க அதிபர், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர்க்கு இது குறித்து சரியான நீதியான விசாரணை நடத்துமாறு கோரும் மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அம் மகஜரில், தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இடம் பெயர்ந்து வவுனியா நலன் புரி நிலையத்தில் வசித்து வரும்வேளை, ஜுலை மாதம் 21 ஆம் திகதி பவுஸர் மோதியதில் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் எனது கணவர் அனுமதிக்கப்பட்டார்.

27 ஆம்திகதி, சிகிச்சை பலனளிக்காத நிலையில் மேற்படி வைத்தியசாலையில் மரணமடைந்த போதிலும் இறப்புச்சான்றிதழில் இயற்கை மரணம் என குறிப்பிடப் பட்டுள்ளது.

அத்துடன், மரண நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்த சமயம், இனந்தெரியாத ஒருவர், எனது கையில் 5 ஆயிரம் ரூபா பணத்தை திணித்து மரணம் குறித்து மேலதிக விபரம் எவையும் அறிய முற்பட வேண்டாம். தேவையானால் இன்னும் சொற்ப பணம்தருகிறேன் என தன்னிடம் தெரிவித்ததாக மகஜரில் தெரிவித்துள்ளார். (க-உ)

ஆடைத் தொழிற்சாலை

## ஊழியர்களிடையே மோதல் ஒருவர் பலி; 50பேர் காயம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பொலிஸாருக்கும் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார். 18 பொலிஸார் உட்பட 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

டாக்கா ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் தமது சம்பள நிலுவை கோரி வீதி மறியல் போராட்டம் நடத்திய வேளை, அங்கு வந்த பொலிஸார் அதனைத் தடுக்க முயன்றனர்.

தடுக்கும் முயற்சியில் ஊழியர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு மற்றும் தடியடிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

இதனால் ஊழியர்கள் கோபமடையவே இருபகுதியினர்க்குமிடையே வன்முறைகள் மூண்டதாகவும், இச் சம்பவத்தில் பொலிஸ் பிரிவினரின் வாகனங்கள் சில தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

யாழ். மாவட்டத்தில்

## குறைந்தளவு எண்ணிக்கையானோரே தபால் மூலவாக்களிப்புக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தபால் மூலமாக வாக்களிப்பதற்கு 1600 பேர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 15 ஆயிரம் பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்களாக இருந்த போதும் மிகக்குறைவானவர்களே தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் சுமார் 5 ஆயிரம் பேர்வரை ஈடுபடுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு

- குறள் -

# வலம்புரி

## பேதிதரும் பீதி

குழந்தையை நையப் புடைக்கும் தந்தைபோல் இருக்கிறது இன்றைய போர் நிலை. சகல வளங்களுடனும் சகல முறைகளிலும் போர் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. போர் விமானங்களின் பேரிரைச்சல் இருதயத்தை உலுக்குகிறது. ஹெலிகள் தரும் பீரங்கிப் பேரிரைச்சல் பீதியைத் தருகிறது. சுதந்திரம் பறிக்கப்பட்ட தமிழினத்தின் இதயம் போல் குமைந்து கொடிய புகையைக் கக்குவதும் காணக் கூடியதாகிறது. பல் குழல் பீரங்கி மற்றும் உரிய வழிகள் அனைத்தும் இந்த மண்ணின் மாந்தரைக் கலக்கிய வண்ணம் ஏதேச்சதிகாரத் தொனி நாளும் கேட்கிறது.

இந்த இக்கட்டான நிலையில், ஜனநாயக சூழல் இம்மியும் இல்லாத வேளையில் தேர்தல் திருவிழாவாம். தேர்தலால் கடந்த கால அறுவடைகள் சப்பியாய்ப் போச்சு. இனியும் அது நடக்காதென்பதற்கு என்ன உத்தரவாதம் என தமிழ் உள்ளங்கள் தவிக்கின்றன.

சிங்களப் பேரினவாதம் ஆட்சிபீடம் ஏறப்பகடைக்காயாய் இருப்பது எம்மினம் தான். மாறி மாறி விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதும், அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாது இழுத்தடிப்பதும் காலம் காலமாக நடந்தேறுகிறது. தேறுவது ஒன்றுமில்லை என்று பச்சாத்தாபப்படும் தமிழினம் திசை மாறிய பறவை போல்தத் தளிக்கிறது.

இவையெல்லாம் போதாதென்று அடுத்த கணத்தின் நிலை தெரி

# இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி

செந்தமிழ் நாட்டிலே என்று மூளதென்றமிழ்க் கவிஞர் பரம்பரையிலே 20 ஆம் நூற்றாண்டின் சகாப்தத்திலே தோன்றியவர்களுள் ஒருவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

தான் வாழ்ந்த காலத்தாலும், சொல்வளம் மிக்க பாடல்களைப் புனைந்த ஆற்றலாலும், அப் பாடல்களில் உள்ள பயனாலும், தீர்க்க தரிசனத்தாலும் பாரதியார் ஏனைய கவிஞர்களை விட வேறுபட்ட ஒருவராக இன்றைய கால கட்டத்தில் திகழ்கிறார்.

உயரிய சிந்தனைகளை உள்ளபடி மட்டும் சொல்லாமல் மனிதகுலம் உயர்வதற்காகவும் வழிகாட்டிய இலட்சியவாதி பாரதி.

தாம் பிறந்த தமிழ் நாடும், அதனைத் தன்னுள் கொண்ட பாரதத் திருநாடும் மங்காத புகழுடன் திகழ வேண்டும் என்பதையே தம் கவிதை வாழ்வின் பயனாகக் கருதி உழைத்த உயர் கவிஞன் பாரதியே ஆவன்.

இவன் எட்டயபுரத்திலே பாரத பூமியிலே பாழும் வறுமைத் தாயின்மடியினிலே மார்கழி மாதம் 11 ஆம் திகதி 1882 ஆம்ஆண்டு பிறந்தான்.

கொஞ்சும் குழந்தைப் பருவத்திலே ஆருயிர் அன்னையை இழந்த போதும் அறிவுகனிந்த தந்தையாரான சின்னச்சாமி ஐயரின் மூலம் பல அரிய தமிழ் நூல்களைக் கற்றுக் கவிஞனானான்.

புதுமைத் தாகமும், புரட்சி எண்ணமும் கொண்ட பாரதி ஆயிரமாயிரம் கவிதைகளைப் பாடினான்.

தேச பக்தி வேறு, தெய்வ பக்தி வேறு என்ற வேற்றுமை காணாத உள்ளம் பாரதியுடையது. அவற்றைப் பற்றி பல பாடல்கள் எழுதினான்.

உயர்ந்த இலட்சியப் பாங்குடன் பிரார்த்தனை செய்து கொண்ட கவிஞர் பாரதியார் தம்மை அறிமுகப் படுத்திக் கொள்ளும் அழகைநோக்கின்

''ஊருக்கு நல்லது
சொல்வேன் — எனக்கு
உண்மை தெரிந்தது
சொல்வேன்''

என்று பாடினான்.

இதிலிருந்தே கவிஞனின் இலட்சிய வெள்ளை உள்ளம் புலப்படுகிறது.

''புதுமைப் பெண்ணே, எழுந்திரு ஆணுக்குப் பெண் இளைத்தவள அல்ல, ஆடிப் பாடிக் கும்மியடி'' என்று அன்றைய காலத்தில் அடுப்படி அனல் பிரதேசத்தை ஆண்ட சோதரிகளுக்கு அழைப்பு விடுத்தான்.

''நல்லதோர் வீணை
செய்தே அதை
நலங் கெடப்புழுதியில்
எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி-
எனைச் சுடர் மிகு அறி
வுடன்படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ
இந்த மாநிலம் பயனுற
வாழ்வதற்காக''

என்ற அவன் பாடல், சமூகத்திற்கு அவனது இலட்சிய இதயத்தைப் படம் பிடித்துக் காட்டும்.

அடிமைத்தனம் ஊன்றிக் கிடந்த பாரத மக்களைதட்டியெழுப்பி அவர்களின் உதிரமெல்லாம் வீர சுதந்திரம் ஊட்டினான்.

தலைகுனிந்திருந்த தமிழன் தலை நிமிரவும், தமிழ்க் கொடியெங்கும் பறக்கவும் அரும்பணியாற்றினார்.

கம்பனைப் போல், இளங்கோவைப்போல், வள்ளுவனைப் போல் பூமிதனில் எவரேனும்பிறந்ததில்லையென்று தமிழ் காவியங்களின் பெருமையை உலகறியப் பறை சாற்றினான்.

தாய்க்கும், தமிழுக்கும் தனிப் பெருமையளித்தான் தீண்டாமைக்குச் சாவு மணியடித்தான். ''எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'' என்று கர்ச்சித்தான்.

1921 ஆம் ஆண்டு 11 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் மதம்கொண்ட யானையொன்றினால் தூக்கியெறியப்பட்டு மரணத் திரையினுள் மறைந்தான்.

காலம் ஒரு நற்கவிஞனைக் கவர்ந்து சென்றது. தமிழ் அன்னை தன் தவப்புதல்வனை இழந்தாள்.

பாரதி மறைந்து விட்டார் என்று கூறுகின்றோம் அது பொய். அவன் பூதவுடலே எரிந்தது புகழுடல் இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் பாரெங்கும் பரவி திகழ்கிறது.

அவன் மரணத்திரையில் மறைந்தாலும் தமிழர் மனத்திரையில் இன்னும் மறையவேயில்லை. (க)

**தர்மினி**

# பொ.ஐ.ஐ. முன்னணிமீது பழிசுமத்த சில தீய சக்திகள் முயற்சி

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் கூட்டங்களில் தாக்குதல் நடத்தி, அதன் பழியை ஆளும் அரசுமீது சுமத்துவதற்கு சில தீய சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் குறித்த விபரங்கள் தமக்கு வெளியாகியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி.போன்ற அமைப்புகளின் தேர்தல் பிரசாரக் கூட்

இதனையடுத்து, மேற்படி இரு கட்சியினரதும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகம் பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

அத்துடன் இக்கட்சிகளின் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று, அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் தரித்து நிற்கும்

படுமாறும் பொலிஸ் பிரிவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் குறித்து விழிப்பாயிருக்குமாறு பொது மக்களுக்கு ஜனாதிபதி செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேசமயம் சந்தேகத்திற்கிடமான வாகனங்களை கைப்பற்றவும் தேவையற்ற விதத்தில் நடமாடுவோரை கைது செய்யவும் பொலிஸ்

## இராசி பலன்

11 / 09 / 2000
(ஆவணி 26, திங்கள்)
திரயோதசி மு. இ. 11-03 வரை
திருவோணம் மு.ப. 7-58 வரை
இராகு காலம்
7.33 - 9.03
சுபநேரம்
12.03 - 1.33
பிரதோஷ விரதம்

**மேடம்**
தொழில் மேன்மை, அலைச்சல், காரிய தாமதம்

**இடபம்**
உஷ்ண ரோகம், காரிய நன்மை, உறவினர் விரோதம்

**மிதுனம்**
துயரச்செய்தி, வீண் விவாதம், காரிய அனுகூலம்

**கடகம்**
பிரயாணம், பணவரவு, உல்லாசம், விருந்துபசாரம்

**சிங்கம்**
புதிய முயற்சிச் சிந்தனை, சந்தோஷ மிகுதி, சத்ரு ஜெயம்

**கன்னி**
தேவையற்ற கற்பனை, காரியத் தாமதம், பணச்செலவு

**துலாம்**
தாய்வழி உறவு, நன்மையான காரியம், பணவரவு

**விருச்சிகம்**
இளைய சகோதரர் உதவி, பிரயாணம், பொருள் வரவு

**தனுசு**
விதண்டாவாதம், நிலை மாறுதல், முயற்சி தாமதம்,

**மகரம்**
சந்தோஷமான செய்தி, ஆரோக்கியம, தெய்வ சிந்தனை

**கும்பம்**
காரிய நட்டம், பிரயாணம், அமைதியின்மை

**மீனம்**
கீர்த்தி பொருள் வரவு, குடும்ப சுகம், காரிய அனுகூலம்

(பணமய கோப்பு

றது. தேறுவது ஒன்று மில்லை என்று பச்சாத்தா பப்படும் தமிழினம் திசை மாறிய பறவை போலத் தளிக்கிறது.

இவையெல்லாம் போதாதென்று அடுத்த கணத்தின் நிலை தெரியாது பரிதவிக்கின்றனர் மக்கள். பொல்லாப்போர் எல்லார் வாழ்விலும் சோகத்தைத் தந்து சோதிக்கிறது.

வயோதிபர்களும், நோயாளிகளும் சாகாமற் சாகின்றார்கள். பேரிரைச்சலும், பீரங்கி வேட்டும் மனித வாழ்நாளைச் சுருக்கும் சுருதிபாடுவது இந்த மண்ணில் தான்.

ஏக்கமற நல்நோக்கமுடன் எமக்குவழிகாட்டுங்கள் என்கிறது மக்கள் உள்ளம். ஒன்று மட்டும் இந்த மண்ணிலே சென்றால் வராது. அதுதான் காலம் இந்தக்காலத்தை வயது வேறுபாடின்றி அத்தனை மக்களும் இழந்த வண்ணம் இருக்கிறார்கள். நோக்கற்ற போக்கால் நொந்து போனார்கள். வெந்த புண்ணில் வேல் பாச்சாது எங்களை பேதிதரும் பீதியால் மடியாது வகைசெய்யுங்கள்.

அன்புடன் ஆசிரியர்

பழியை ஆளும் அரசுமீது சுமத்துவதற்கு சில தீய சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் குறித்த விபரங்கள் தமக்கு வெளியாகியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி.போன்ற அமைப்புகளின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலேயே இவ்வாறான தாக்குதல்கள் நடத்தத்திட்டமிடப்பட்டிருக்கிறது.

பினர்கள் அமைச்சர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகம் பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

அத்துடன் இக்கட்சிகளின் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று, அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் தரித்து நிற்கும் வாகனங்கள், தேவையற்ற விதத்தில் நடமாடும் நபர்கள் குறித்து கண்காணிப்பில் ஈடு

பொது மக்களுக்கு ஜனாதிபதி செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேசமயம் சந்தேகத்திற்கிடமான வாகனங்களை கைப்பற்றவும் தேவையற்ற விதத்தில் நடமாடுவோரை கைது செய்யவும் பொலிஸ் பிரிவினர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

**கும்பம்**
காரிய நட்டம், பிரயாணம், அமைதியின்மை

**மீனம்**
கீர்த்தி பொருள் வரவு, குடும்ப சுகம், காரிய அனுகூலம்

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்

# மணற்காடு, குடத்தனைப் பகுதியில் மீன்பிடிக்க படையினர் அனுமதி

## ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) கடும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

மணற்காடு மற்றும் குடத்தனைப் பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு கடந்த ஒரு வாரகாலமாக விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து வடமராட்சிப் பகுதி ஈ.பி.ஆர்.எல்.எப் பொறுப்பாளர்களுக்கு எடுத்துரைத்ததன் மூலம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியை அடுத்து இத்தடை நீக்கம் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம், வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி மணற்காடு பகுதியில் கடந்த 8 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினை கடற்றொழிலாளர்கள் நடத்தியிருந்தனர்.

எனினும் அப்பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி அவ்விடம் சென்று விரைவில் சாதகமான பதில் தருவதாக கூறிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

(43-3-உ)

## குருநகர் கடலில்

# தொழில் செய்ய முடியாதவர்களுக்கு விரைவில் நட்ட ஈடாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் தொடரும் யுத்த அனர்த்தத்தினால் குருநகர் கடலில் தொழில் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, பகுதிகளைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் கடற்றொழிலாளர் இதனால் நன்மை அடையவுள்ளனர். (க)

# 16 குடும்பங்கள் வன்னிக்கு

(வவுனியா)

அண்மைக்கால வன்செயல் காரணமாக தென்மராட்சிப் பகுதியில் இருந்து 16 குடும்பங்கள் வன்னிப் பகுதிக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குடும்பங்கள் தற்காலிகமாக அக்காராயன் கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந - 2)

# நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மறைந்த யாழ். மாநகர சபை முதல்வர் பொன் சிவபாலனின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று காலை 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நினைவஞ்சலி இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# லக்ஷ்மன் ஜெயக்கொடி விவகாரம் பொ. ஜ. ஐ. முன்னணிக்குள் பூசல்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கு இடமளிக்கப்படாததையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் உட்பூசல்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக்கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கு தேசியப்பட்டியலில் இடமொதுக்கப்பட்டுள்ள அதேவேளை லக்ஷ்மன் ஜெயக்கொடி புறக்கணிக்கப்பட்டதனால் அவரின் ஆதரவாளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை வெளிநாட்டுத் தூதுவர் பதவியை வழங்க ஜனாதிபதி முயற்சித்தபோதிலும் அதனை லக்ஷ்மன் ஜெயக்கொடி ஏற்க மறுத்துவிட்டதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

### ராணுவம்...

ருக்கு உதவியாக மிக்ரகக் குண்டு வீச்சு விமானங்களும், இராட்சதக் ஹெலிகளும் வான்பரப்பில் தொடர்ந்து ஒருமணி நேரம் குண்டுகளை வீசித்தள்ளியதுடன் சரமாரியாக வேட்டுக்களை தீர்த்த வண்ணமுமிருந்தன.

இவற்றுக்கு மேலாக வலிகாயப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து ஆட்லறி ஷெல்களும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டன.

இம்மோதல் சம்பவங்களின் போது இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட சேத விபரம் பற்றி உத்தியோக பூர்வமான அறிவித்தல்கள் எதுவும்இருதரப்பினரிடமிருந்தும்இச்செய்திஎழுதும்வரை கிடைக்கவில்லை.

இந்த இராணுவ நடவடிக்கையை புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல பலல்லயும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் இணைந்து மேற்கொண்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இராணுவ நடவடிக்கை தொடர்வதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

### காயமடைந்த...

சாலைக்கு எடுத்துச்சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதன்போது பலாலி வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடிகளை சமாளிப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

காயமடைந்த இராணுவத்தினரை சிகிச்சையளிக்கப்பட்ட நிலையிலேயே ஏற்றிச் செல்லப்பட்டதையும் காண முடிந்தது. (வ)

### கொழும்புத்துறை...

உள்ள இரண்டு தளங்களும் கொழும்புத்துறைச் சந்தியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பாதையில் உள்ள பிரதான பாலமொன்று தகர்க்கப்பட்டிருந்ததையடுத்து அப்பாலம் தற்போது திருத்தப்பட்டுள்ளதாகவும் இப்பகுதியில் நிலத்துக்கடியில் இயங்கி வந்த செய்தி தொடர்பு தகவல் நிலையமொன்றையும் இராணுவம் கைப்பற்றியுள்ளதாகவும் ஊடக தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்

### அப்பா நடேசன்

கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகக் கொண்ட அப்பா நடேசன் (10-09-2000 ஞாயிறு) நேற்று காலமாகிவிட்டார். அன்னார் மாசிலாவின் அன்புக் கணவரும் அற்புதராசா, சிறிதரன் (உரும்பிராய் வைத்திய சாலை), றஜனி, ரதி, மாலினி, மனோகரன்(சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகுமார் (யாழ். பல்கலைக்கழகம்), சுரேந்திரகுமார் (யாழ். மாநகர சபை), மஞ்சுளா. சுதாமதி, சுசி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந்த், கோபிநாத், திலீப், ஐதுர்சனா, சரண்ஜா, செனசிகா, வெண்பா, மஜித், யுனட்சன், லட்சயன். லக்சனாத், தனுஜா, கிறிஸ்ரியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (11-9-2000) திங்கள் இன்று காலை 9-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்;
மாசிலா (மனைவி)
பிள்ளைகள்.

அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,

(இ-786)

### அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய ஆசிரியர்களை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு சுரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு வருகை தருமாறு வித்தியாலயஅதிபர் மு. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ந-2)

### 139 தேர்தல்...

ஜே. வி. பிக்கு எதிராக 3 முறைப்பாடுகளும் ஏனைய கட்சிகளுக்கு எதிராக ஆறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### முன்னாள்...

பாக உரையாடிக் கொண்டிருந்த சமயம் இரண்டு சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்களே இத்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

துப்பாக்கி நபர்களின் சரமாரியான வேட்டுக்களினால் இருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

எதிர்வரும் பொதுத் தேர்தல் சம்பந்தமாக எவ்வகையான உத்திகளை கையாளலாம் என ஆராய்வதற்கு எஸ். மனோகரம்பிள்ளை வீட்டில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே இத்துப்பாக்கிச் சம்பவம் நடைபெற்றதாக தெரிய வருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இருவரது சடலங்களும் கல்முனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 12 பேரது வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்ட போதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸ் அதிகாரி சிரான் பெரேரா புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை சுட்டுக்கொல்லப்பட்ட செழியன் ஜே. பேரின்பநாயகத்தின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது சொந்த இடமான மண்டூரிலும் எஸ். மனோகரம்பிள்ளையின் இறுதிக் கிரியைகள் பாண்டிருப்பிலும் நடைபெறும் (வ-சு-60-108)

# பணம் செலுத்தாத வாடிக்கையாளர் மீது ரெலிக்கொம் சட்ட நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

இதுவரை தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தாத பாவனையாளர்கள் எதிர்வரும்14ஆம்திகதிக்கு முன்னர் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். இல்லாவிடில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறுரெலிகொம் நிறுவனப்பிரதித்தலைவர் கனகசூரியர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாவனையாளர்கள், முகாமையாளருடன்தொடர்பு கொண்டு தாம் செலுத்த வேண்டிய கட்டணத்தில் முதல்35வீதத்தைஉடன்கட்ட வேண்டும். பின்னர் தவணை முறையில் மீதிப் பணத்தையும் கட்ட முடியும். தவணை முறையிலான கட்டணம் பற்றியமுடிவைப்பொது முகாமையாளரே தீர்மானிப்பார்.

இதேவேளை பாவனையாளர்கள் தாம் செலுத்தவேண்டியகட்டணத்தில் 75 அல்லது 60 வீதத்தை முதலில் கட்டுவார்களாயின் அவர்களுக்கு உள்வரவு அழைப்புக்குரிய இணைப்புகள் வழங்கப்படும். முழுக்கட்டணமும் கட்டிய பின்னரே வெளி அழைப்பு வழங்கப்படும்.

கட்டணம் செலுத்தியபின் ரெலிக்கொம்நிறுவனத்துடன் ஒரு உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள முடியுமென்றும் சட்டநடவடிக்கைஎடுக்கப்பட்ட பின் எக்காரணம் கொண்டும் புதிய இணைப்பு வழங்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ - 03)

### மூதூரில்...

மோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

குருநாகலைச்சேர்ந்த பவித் சில்வா, சத்திரஸ்ரீ ஆகிய படையினரே இவ்வாறு பலியானவர்களாவர்.

இச்சம்பவத்தில் பலியான ஆட்டோ சாரதி ராஜமுகமது சனிதார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட இருபடையினரின் சடலங்களும் மூதூர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணையின் பின் குருநாகலுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அமைச்சர்...

களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் இவர்கள் ஐவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

தொழில்அமைச்சர் ஜோன் செனவிரத்னா நேற்று மாலை நுவரெலியா சென்றதாகவும் அங்கு பிரதி சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சியின் ஆதரவாளர்கள் அமைச்சரின் வாகனத்தை நோக்கிச் சுட்டதாகவும் அப்போதே மெய்ப்பாதுகாவலர்கள் காயமடைந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு உட்கட்சிப் பூசல்களே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## நாடு திரும்பினர்

(கொழும்பு)

இராணுவத்தினருக்குப் பயிற்சி வழங்குவதற்காக இலங்கை வந்திருந்த அமெரிக்க இராணுவப் பயிற்றுநர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

53வது பிரிவின் கமாண்டோக்களும், கடற்படையினரின் எஸ்.பி.எஸ் கமாண்டோ படையணியும் அமெரிக்க இராணுவ நிபுணர்களால் விசேட பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

### இளைஞன்...

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது ஈசைச் செல்வன் என்ற இளைஞனே காயமடைந்தவராவார். காயமடைந்தநிலையில் இவரை வைத்தியசாலையில் அனுமதிக்க அனுமதி மறுக்கப்பட்ட போதும், ரெலோ அமைப்பின் தலையீட்டினைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### யாழ் மாவட்ட...

தாகத் தெரியவருகிறது.

வேட்பாளர்களின் பாதுகாப்பு கருதியே இவ்விபரம் சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் விபரங்களும் திரட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)


BOND

புலமைப்பரிசில் பயிற்சி
வினாத்தாள்கள்
பெற்றுக்கொள்ளலாம்
மாதாந்த பயிற்சிப்
பரீட்சை
வழமைபோல்
Poya Day
நடைபெறும்.
(இ/785)

வினையே உங்கள் இனம்! சேவையே எங்கள் எண்ணம்!

கப்பமற்ற
கடத்தலற்ற
கொள்ளையற்ற வாழ்வுக்கு
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
எமது வாக்குகளை அளித்திடுவோம்!

(ஈ. பி. டி. பி)



ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலையீட்டையடுத்து கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட குருநகர் மீனவர்களது 60மீன்பிடி அனுமதிப்பத்திரங்களும் 16வள்ளங்களும் மீளப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. (இ/ 736)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வென்லாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.